அன்று நகரத்தார்கள் கண்ட பர்மா - இன்று !

முனைவர் ஆறு. அழகப்பன்



இரங்கூன் ஆறரையில் முருகப்பெருமான்
நகரத்தார்களுக்கு கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்த குமரக் கடவுள்

பர்மாவைவிட்டு நகரத்தார்கள் புறப்படும் முன் பாடிய பாடல்

ரெங்கூன் நாட்டுக்கோட்டை செட்டியார்களின்
கோயில்கள் தர்ம பரிபாலன சபை வேண்டற்பா பாடல்

ஆண்டவனே ஓம் முருகா ஆறரையின் – மேற்செம்மை
பூண்டவனே அன்புநகை பொற்கோலம் – வேண்டுவமே
தாயகம் சென்றாலும் தாள்பணிவோம் – என்றென்றும்
ஆயமுடன் வந்தெம்மை ஆள்

02–01–1965
(இப்பாடல் கல்வெட்டில் உள்ளது)

சித்தாந்த நன்மணி
சிவத்திரு. பழ. ஷண்முகம்
பாடியது

பெருமைக்குரிய நகரத்தார் சங்கத் தலைவர்களுக்கும் மற்றும் நகரத்தார் பெருமக்களுக்கும்

வணக்கம்.

செட்டிநாட்டு மக்களுக்கு என உலக வரைபடத்தில் ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டும் பெருமையைக் கொடுத்த பர்மா நாட்டில் 01–01–2004 முதல் 30–01–2004 முடிய ஒரு மாதம் பண்பாட்டுப் பயணம் மேற்கொண்டேன். என்னை நகரத்தார் சங்கங்களும், நகரத்தார் பத்திரிகைகளும், தமிழறிஞர் களும், நண்பர்களும் சிறப்பாக வழியனுப்பி சிறப்பித்தனர். திருச்சி மனிதநேயர், **அன்புமலை வி. கே. என். கண்ணப்பனார்** போகவர விமானப் பயணச் சீட்டுதொகை நகரத்தார் நலம் பெருகட்டும் என்று வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

இன்று பர்மாவில் வாழும் நகரத்தார்கள் :

திரைகடலோடித் திரவியம் தேடிய ஆயிரக் கணக்கானோர் கொண்டு விட்டு கொண்டு வந்த பொன் விளையும் பூமியில் தற்போது அடையாளம் காட்ட நகரத்தார் பெருமக்கள் 17 பேர் உள்ளனர். அவர்கள் விபரம்.

1. பெரி. வீரப்ப செட்டியார்
(வயது 90)
கண்டனூர் புதுவயல்
எண்.413, எண். 10 கல்வி
யாருவைதட்டாக்கலை

2. சாத. ராமசாமி செட்டியார்
(வயது 77)
நெற்குப்பை, 100 சுவைப்
போந்தாவீதி, யாங்கூன்.

3. சுப. ந. கண்ணப்ப செட்டியார்
(வயது 76)
மதகுபட்டி தொந்தை,
ஹந்தாவாடி ஜில்லா

4. சாத. ராமையா (வயது 62)
நடராஜபுரம்
தொந்தை, ஹந்தாவாடி ஜில்லா

5. ராம. ஆத. சொ. இராமநாதன்
(வயது 66) நடராஜபுரம், பர்மா
நாட்டுக்கோட்டைத் தமிழர்கள்
சங்கக் காரியதரிசி, கீமந்தான்.

6. ராம. சீனிவாசன் செட்டியார்
(பண்டாரமாக–ஆறறையில் பூசை
செய்பவர்) (வயது 77) ஒ.
சிறுவயல்
112–122 ஆறரை சுவேப்போந்தா
வீதி, யாங்கூன்.

7. சி.மு. கண.மு. முத்தையா செட்டியார் (வயது 84)
கீழச்சிவல்பட்டி
ரெ.நா.கோ.செ. கோ. தர்ம பரிபாலன
சமைபயின் உபகாரியதரிசி
அவுமிங்களாவீதி, சௌமியவ்ம்

8. நா. லெட்சுமணன் செட்டியார் (வயது 84) பாகனேரி
நரசிங்கோம்,
ஹந்தவாடி ஜில்லா.

9. தெ. நா. லெட்சுமணன் செட்டியார்
பாகனேரி. ரெ.நா.கோ.செ. கோவில்களின் தர்மபரிபாலன சபையின் உபதலைவர்.
கல்லிட்டோ தொந்தை டவுன்ஷிப்.

10. நா.லெ. ராமநாதன் (வயது 82)
ஒக்கூர் ரெ.நா.கோ.செ. கோவில்களின் தர்மபரிபாலன சபைத் தலைவர்
எண்.94, எண்.38 கல்லி,
யாங்கூன்.

11. அரு. ரெத்தினம் செட்டியார் (வயது 79) பாகனேரி,
ரெங்கோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோயில்களின் தர்மபரிபாலனச் சபைக் காரியதரிசி
எண்.116, சுவேப்போந்தா வீதி,
யாங்கூன்.

12. நா.பழ. சிங்காரம் செட்டியார் (வயது 62) மேலைச்சிவபுரி
கமாயுட்,
கலன் டவுன்ஷிப்

13. இராமநாதன் செட்டியார் (வயது 86) நாட்டரசன் கோட்டை, கூஞ்சாங்கோம்.

14. மு.சா.மு. முத்துக்கருப்பன் செட்டியார் (வயது 85)
பி. அளகாபுரி
பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தலைவர்
டாங்கூ, டாங்கூஜில்லா.

15. முத்தையா செட்டியார் (வயது 84)
கானாடுகாத்தான்
டாங்கூ,
டாங்கூஜில்லா.

16. பழ. கி. கிருஷ்ணப்ப செட்டியார் (வயது 80)
கீழச்சிவல்பட்டி,
மோல்மேன்.

17. பழநியப்ப செட்டியார் என்ற மணிச்செட்டியார் (வயது 76)
மேலைச்சிவல்புரி,
மாந்தளை.

பலர் பர்மாவை மறந்து விட்டதால் சிறு வரலாற்றுச் செய்திகள் :
நகரத்தார்கள் வசம் உள்ள திருக்கோயில்கள் :

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நகரத்தார்கள் பர்மாவில் லேவாதேவித் தொழிலைத் தொடங்கினர். பர்மாவின் கிழக்குப் பகுதியில் உள்ள மோல்மினில் முதன் முதலில் குடியேறிய நகரத்தார்கள் நாளடைவில் பர்மா நாடெங்கும் குடியேறித் தொழில் செய்யத் தொடங்கினர். 1923 ஆம் ஆண்டில் எடுக்கப் பெற்ற ஒரு கணக்கின்படி ஏறத்தாழ 150 ஊர்களில் 1250 கடைகள் வைத்துத் தொழில் நடத்திய நகரத்தார் ஏறத்தாழ எழுபது கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்ததாகத் தெரியவருகின்றது.

சென்ற இடமெல்லாம் சைவமும் தமிழும் வளர்ககும் இயல்புடைய நகரத்தார்கள் பர்மாவிலும் இப்பணிகளைச் சிறப்பாகச் செய்தனர். பர்மாவில் 59 ஊர்களில் 62 கோவில்களை நகரத்தார்கள் கட்டியிருக்கிறார்கள். இவை அனைத்தும் திராவிடக் கட்டிடக் கலை முறையில் கட்டப் பெற்றவை. கோவில்களும் அவற்றைச் சார்ந்த நந்தவனங்களும் மடங்களும் மிகப்பெரிய அளவில் ஏற்படுத்தப்பெற்றன. ஒவ்வொரு ஊரிலும் ஆண்டுதோறும் ஒரு திருவிழா சிறப்பாக நடைபெற்று வந்தது. சித்ரா பௌர்ணமி, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பல ஊர்களில் திருவிழாவை ஒட்டி, சுவாமி உலாவருதல் சிறப்பாக நடைபெற்றது. இதற்காக வெள்ளி ரதங்களும் வெள்ளி வாகனங்களும் செட்டிநாட்டில் உருவாக்கப்பெற்றுப் பர்மாவுக்கு அனுப்பிவைக்கப்பெற்றன. இரங்கூன், ஈந்தட்டா, பாசியன், மோல்மீன், பக்கோ ஆகிய ஊர்களில் வெள்ளித்தேர் உலா மிகவும் பேர் பெற்றதாகும். பெரும்பாலான ஊர்களில் விழா நாட்களில் நகரத்தார்கள் அன்னதானம் நடத்தினர்.

நகரத்தார்கள் பர்மாவில் கோவில் கட்டிய 59 ஊர்கள் வருமாறு :

1. இரங்கூன் 2. பசுமந்தான் 3. கீமந்தான் 4. லேகூ 5. மோபி 6. தக்கி 7. அவுக்கான் 8. தொவுஞ்சை 9. லேப்பட்டான் 10. மீன்லா 11. அவுப்போ 12. சூப்பிங்கான் 13. சீக்கோம் 14. நத்தலின் 15. பவுண்டை 16. தேக்கோன் 17. புரோம் 18. ஈனாஞ்சான் 19. தயட்மியோ 20. ஈந்தட்டா 21. நத்தஞ்சான் 22. பாசியன் 23. மைனாங் 24. உவாக்கமா 25. மியாங்மியா 26. சூமங்கை 27. ஐமென் 28. பியாப்பம் 29. சைலா 30. டேரியா 31. தொந்தை 32. போக்கலை 33. மோல்மேன்சூன் 34. சைப்பி 35. சோசான் 36. மூப்பின் 37. எவுண்டம் 38. மவுஞ்சவுட்டான் 39. தோங்குவா 40. கட்டப்பினா 41. கையாங் 42. டாப்பின் 43. பக்கோ 44. சைட்டோ 45. தன்னப்பின் 46. சைக்கோ 47. தத்துவம் 48. சுவைச்சான் 49. மோல்மீன் 50. டையூ 51. நவுலியப்பன் 52. பென்விக்கோன்

53. பியூ 54. டாங்கோ 55. பின்மெனா 56 மீஞ்சான் 57. மாந்தளை 58. மணியுவா 59. மீன்பு இவற்றுள் குறிப்பிடத்தக்கவை இரங்கூன் ஆறறைத் தண்டாயுதபாணி கோவில், பசுமந்தான் தண்டாயுதபாணி கோவில் ஆகியவை.

ஆறறைக் கோவில் 1890 இலும் பசுமந்தான் கோவில் 1900 இலும் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இவ்விரு கோவில்களையும் நிருவாகம் செய்வதற்காக 1935 ஆம் ஆண்டு இரங்கூன் நாட்டுக் கோட்டைச் செட்டியார் கோவில்களின் தர்மபரிபாலன சபை என்ற அமைப்பு உருவாக்கப்பெற்றது. கம்பையில் ஒரு நகரத்தார் மடத்தையும் இவ்வமைப்பே நிருவகித்து வருகிறது. பசுமந்தான் தண்டாயுதபாணி கோவில் 1942 இல் சப்பானியர் குண்டு வீச்சால் பழுதடைந்தது. நகரத்தார் மடத்தில் பாலாலயம் அமைத்து மூர்த்திகளை வைத்து வழிபாடு செய்து வந்தனர். 1963 ஆம் ஆண்டு இக்கோவில் திருப்பணி தொடங்கப்பெற்ற 1964 ஆம் ஆண்டில் திருக்குடநீராட்டு விழா நடைபெற்றது. 1979 இல் மீண்டும் இக்கோவிலுக்குக் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

பர்மா நகரத்தாரின் தமிழ்த் தொண்டில் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கது கம்பைத் தனவைசியர் கல்விக் கழகம் (துக) அமைத்ததாகும். 1928 இல் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி 1930 இல் அதனை உயர்நிலைப் பள்ளியாக்கி 1950 வரை நடத்தி வந்தனர். அதற்குப் பின்னரும் இக்கல்விக் கழகம் தன்னுடைய நிதியிலிருந்து நகரத்தார் மாணவ மாணவியருக்குக் கல்வி உதவித் தொகை வழங்கியும் தமிழகத்தில் இருந்து அறிஞர்களை வரவழைத்து விழாக்கள் நடத்தியும் தொடர்ந்து தொண்டு செய்து வந்தது. இரண்டாவது உலகப்போரின் போது இப்பள்ளிக் கட்டிடம் இ.தே.ரா.வின் பாலசேனா பயிற்சி நிலையமாகப் பயன்படுத்தப்பெற்றது.

இக்கல்விக் கழகத்தின் மற்றொரு சாதனை 14.11.1964 ஆம் நாளில் திருக்குறளைப் பர்மிய மொழியில் மொழி பெயர்த்து மூவாயிரம் படிகளை அன்பளிப்பாக வழங்கியதாகும்.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம், அகிலபர்மா தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கம், ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மானேஜிங் சொசைட்டி ஆகியவை பர்மாவில் இரங்கூனைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த நகரத்தார் பொது அமைப்புக்கள் ஆகும். 23.8.1923 இல் தொடங்கப்பெற்ற பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார் சங்கம் 1933 ஆம் ஆண்டு தனவணிகன் என்ற வார இதழைத் தொடங்கி 1941 ஆம் ஆண்டு வரை நடத்தியது. இச்சங்கத்தின் வேண்டுதலை ஏற்றுப் பர்மிய அரசு பர்மியச் சட்டசபையிலும் இரங்கூன் மாநகராட்சி மன்றத்திலும் நகரத்தார்களுக்கு ஒவ்வோரிடம் ஒதுக்கிக்கொடுத்தது. பள்ளத்தூர் அ.மு.மு வெள்ளையஞ்

செட்டியார் சட்டசபை உறுப்பினராகவும் கோட்டையூர் அ.க.அ.சித. அழ. சிதம்பரம் செட்டியார் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றினர். 1929 இல் சங்கம் இரங்கூன் பல்கலைக் கழகத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கியது.

1962 இல் 125 கப்பல்களிலும், 12 விமானத்திலும் புறம் வாழப் பயந்து ஆயிரக்கணக்கான நகரத்தார்கள் புறப்பட்ட நிலையில் பல கோயில்கள் ஊரார், மற்றும் சமூகத்தவர் கைக்கு மாறியுள்ளன. கம்பை என்ற ஊரில் கோயிலுக்கு இடம் கொடுத்த பிறர் நாம் கோயில் கட்டியவுடன் திருவிழாவில் இடம் கொடுத்ததால் தமக்கே முதல் மரியாதை செய்ய வேண்டும் என்று கூறி நீதி மன்றம் வரை செல்ல, இடம் கொடுத்தவனுக்கே விட்டுக் கொடுத்துவிட்டு வந்துவிட்டார்கள். சில இடங்களில் கோவில் பூஜா கட்டளை செலவிற்கு இருக்கும் கோயில் ஆபரணங்களை விற்றுப் பூசைகள் செய்துள்ளனர். கூட்டிக்கழித்து தற்போது ஆறரையில் உள்ள திருக்கோயிலும், பசுமந்தான் தெண்டாயுதபாணி திருக்கோயிலும், பசுமந்தான் மடமும், மேலும் ஒரு சில கோயில்களும் நகரத்தார் பரிபாலனத்தில் உள்ளன. சுற்றியுள்ள வீடுகள், இடங்கள் பழங்காலத்தில் விடப்பட்ட வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் பதிப்பித்த இவ்வரலாற்றுச் செய்தியை நகரத்தார் கலைக்களஞ்சியம் வெளியிட்டடுள்ளது இங்கு நன்றியுடன் குறிப்பிடத்தக்கது.

தற்போது இரண்டு பெரும் சபைகள் உள்ளன.

1. பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சங்கம் :

இதன் தலைவர் : **மு.சா. மு. முத்துக் கருப்பன் செட்டியார்** (வயது 85) பி. அளகாபுரி

செயலாளர் : **ராம. ஆத. சொ. இராமநாதன் செட்டியார்** (வயது 66), நடராசபுரம்

இச்சங்கத்தில் தொடக்கத்தில் 25 சங்க உறுப்பினர்கள் இருந்திருக் கின்றனர். தற்போது 10 பேர்களுக்குள் உள்ளனர். ஆண்டுக்கொருமுறை கூட்டம் கூட்டவேண்டும். போதிய உறுப்பினர்கள் இல்லாமையால் கூட்டம் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை. பர்மாவிலிருந்து வந்த நகரத்தார்கள் இச்சங்கத்திடம் தங்கள் நிலம் சம்பந்தமாக 2500 பேர்கள் இச்சங்கத்திடம் நிலஉரிமை இழப்பீடு பெற உரிமை (பவர்) கொடுத்து வந்துள்ளனர். நிலங் களுக்கு ஒரு முறை மட்டும் ரூ. 2500 இழப்பீடு அரசு கொடுத்ததோடு சரி. பிறகு அரசு கேளாக் காதினராய் எந்தவித பதிலும் தராமல் இருந்துவிட்டனர்

2. கோவில்கள் தர்ம பரிபாலன சபை :

இதன் தலைவர் : **நா. லெ. இராமநாதன் செட்டியார்** (வயது 82), ஒக்கூர்.

செயலர் : **அரு. ரெத்தினம் செட்டியார்** (வயது 79), பாகனேரி.

இச்சபைக்கு உபதலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது நகரத்தார்களுக்குரிய கோயில்களைப் பராமரிக்கும் பொறுப்புடையவர்கள் இழந்துவிட்ட கோயில்களின் முழு வரலாற்றையும் நன்கு அறிந்தவர்கள், விவரமானவர்கள், சந்திக்கத் தக்கவர்கள்.

தைப்பூசத்தில் முதல் மரியாதை :

மேலே குறிப்பிட்ட அனைவரையும் கண்டு மகிழ்ந்தேன். ஆறுமுறை ஆறரைசென்றேன். உரையாடி னேன். ஆறறையிலும், பசுமந்தானிலும் முருகப் பெருமானை வழிபட்டேன். பசுமந்தான் தண்டாயுதபாணி கோயிலில் தைப்பூசக் கொடியேற்று விழாவிற்கு சென்றபொழுது என்னைச் சிறப்பித்துக் காளாஞ்சி அளித்து முதல் மரியாதை செய்தனர்.

தலைவரைச் சந்தித்தேன் :

கோவில் தர்ம பரிபாலனை சபைத் தலைவர் திரு. நா.வெ. இராமநாதன் செட்டியாரை ஆறறையில் சந்தித்து அவர் இதுகாறும் நகரத்தார் சமூகத்திற்குச் செய்த பல தொண்டுகளைப் பாராட்டினோம். குறிப்பாக பாரதப் பிரதமர் நேரு தவிர அனைத்துப் பிரதமர்களுடன் நமக்கு நில நஷ்ட ஈடு தரவேண்டும், அதற்கு உதவிட வேண்டும் என்று விடாமல் கேட்டுள்ளார். தாயகத்திற்குத் தமிழர்கள் திரும்பும்பொழுது 125 கப்பல்களிலும் துறைமுகம் வந்து அவர்களை வழியனுப்பி உள்ளார். பலரை விமானம் வழி அனுப்பி உள்ளார். தமிழகத்தில் உள்ள சென்னை பவளக்கார தெருவில் உள்ள ரெங்கூன் விடுதியை நவீன முறையில் இரங்கூன் நினைவாகப் புதுப்பித்துக் கட்ட பல ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இவைகளை அறிந்து பாராட்டிப் புகழ்ந்தோம்.

நாம் என்ன செய்ய வேண்டும்?

இப்பயணத்தின் பயனாக, நம் சங்கங்களும் நகரத்தார் பெருமக்களும் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன என்பதை உணர்ந்தேன். முதற்கட்டமாகச் செய்ய வேண்டியது, நகரத்தார்கள் இனி தைப்பூசத்திற்கு

ஆண்டு தோறும் சுற்றுலா அல்லது வியாபார நிமித்தமாக பர்மா செல்ல வேண்டும். பத்து பத்துப் பேர்களாகச் சென்றால் ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்கும். கல்கத்தாவரை இரயிலில் சென்று அங்கிருந்து விமானத்தில் சென்று அதே வழி திரும்பி வந்தால் ரூ. 20,000க்குள் பயணக் கட்டணம் வரும்.

பர்மா நகரத்தார்கள் செய்ய வேண்டியது :

இவர்கள் பர்மாவில் முறைப்படி அனுமதியுடன் தங்கிட வேண்டிய வசதிகளையும் தர்ம பரிபாலன சபை செய்யவேண்டும். அவர்கள் பொறுப்பில் உள்ள பசுமந்தான் மடத்தில் தங்கிட சகல உதவிகளையும் வசதியுடன் செய்ய வேண்டும். ஒட்டலில் தங்க விரும்புபவர்களை அங்கு தங்கச் செய்யலாம். தற்போது நாடு நல்ல நிலையில் இருப்பதாலும் இருப்பவர்கள் பலர் மூத்த வயதுடையவர்களாக இருப்பதாலும், தமிழகத்திலிருந்து பலரை வரவழைத்துச் சட்டபூர்வமாக தங்கவைத்து தம் வழித்தோன்றல்களாக ஆக்கிவிடவேண்டும்.

உரியவை பெற ஒரு குழு :

மற்றொரு குழு (குறிப்பாக, கோவிலூர் ஆதீனத்தின் சார்பாக பிரதிநிதிகள் கோவிலூர் ஆதினம் சார்பாக நடந்த 96 ஊர் மாநாட்டில் வெளிநாட்டுச் சொத்து மீட்கப்பட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நம் நகரத்தார் பத்திரிக்கை ஆசிரியர்கள் முக்கிய சங்கத் தலைவர்கள், நகரத்தார் முன்னணி தலைவர்கள்) ஒரு குழுவாகச் சென்று நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத் தலைவரைச் சந்தித்து உரையாடி, சரியான விபரம் அறிந்து, நமக்குரிய இழப்பீட்டுத் தொகையை புதிதாக ஏப்ரலில் உருவாகப்போகும் அமைச்சரவையில் உள்ள வெளிநாட்டு அமைச்சரிடமும், டெல்லியில் உள்ள பர்மீயத் தூதரகத் தூதுவரிடமும், பர்மாவில் உள்ள இந்தியத் தூதுவரிடமும் கொடுத்தால் பயன் விளையும். பலன் கிடைக்கும். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். முயற்சி திருவினையாக்கும்.

மீட்க வேண்டியது 200 கோடிக்கு மேல் :

நாடார் சமூகம் தம்மிடம் இருந்த மெர்க்கண்டைல் பாங்க் கை விட்டுப் போனதும் மீண்டும் இன ஒற்றுமையை ஏற்படுத்தி அந்த வங்கியை மீட்டு விட்டார்கள். 200 கோடிக்கு மேல் நகரத்தார் சொத்தாக மதிக்கப்படும் 30 இலட்சம் ஏக்கர் நிலம், தோட்டம், வீடு, வாசலை இழந்து நாம் இன்று வாளாய் இருப்பது எந்தவகையிலும் சரியாக எனக்குப்படவில்லை.

நொடிப் பாராட்டு :

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். நான் தை மாதத்தில் தெரிவிக்கும் இச் செய்திகளின் அடிப்படையில் நகரத்தார்கள் விழிப்புணர்வு

கொண்டு உரிமைகளை உணர்ந்து உரியவைகளைப் பெற்றால் 1962 இல் நாம் விட்டு வந்த சொத்து சுகங்களை 2004 ஆம் ஆண்டில் நமக்காக நம்மவர் ஒருவர் முதிய வயதில் சென்று தக்க நேரத்தில் நல்ல தகவல்களை நாம் நலம்பெற தந்திருக்கிறாரே என்ற ஒரு நொடி நினைத்துப் பார்த்தால் அதுவே எனக்குப் போதும்; அப்பாராட்டு பர்மாவில் தர்மசீலராக வாழ்ந்த என் தந்தைக்கும் என்னை ஈன்ற தாய்க்கும் போய்ச் சேரும்.

என்றும் தங்கள் நினைவில் நிற்கவிரும்பும் அன்பன்

ஆறு. அழகப்பன்

ஆறு. அழகப்பன்

தொடர்புக்கு ஆங்கில முகவரி :

உரிமைகள் தொடர்பாக :

The President (Secretary)
The Nattukkottai Chettiars Association Burma
No. 74, Shwebontha (Mogul) Street, Yanguun.

கோவில் வழிபாடுகள் தொடர்பாக :

The President (Secretary)
Temple Dharma Paripalana Sabai
No. 74, Shwebontha (Mogul) Street, Yanguun.

முனைவர் ஆறு.அழகப்பன் பர்மா சுற்றுப் பயணத்தில் பெற்ற பெருமைகள் :

இரங்கூன் அறநெறிக்கழகம், இந்து தமிழ் மாமன்றம், தட்டோன் வள்ளுவர் கோட்டம், தமிழ் இல்லம், கலைமகள் கல்வி நிலையம், சன்மார்க்க சங்கம், நகரத்தார் தர்ம பரிபாலன சபை, முதலிய அமைப்புகள் வரவேற்பு அளித்தன.

தமிழ் இல்லம் அமைப்பு சார்பாக தமிழ்த் தூதுவர் என்ற பட்டமும் பெரியார் சுயமரியாதை இயக்கம் சார்பாக இலக்கியமேதை என்ற பட்டமும் அளித்தனர்.

தட்டோனில் தமிழ் இல்லத்தில் தமிழ்த்தாய் ஓவியம் திறந்து வைத்தார். திருவள்ளுவர் உருவம் பொறித்த தங்கக் காசுகளை வெளியிட்டார்.

பேரா. ஆறு. அழகப்பன் அவர்கள் வருகையை முன்னிட்டு திரு. சீ. கிருஷ்ணன் என்பவர் பத்து ஏக்கர் நிலம் அளிக்க அதனை தமிழ் இல்லத்திற்குக் கொடுத்து வந்துவிட்டார்.

திருக்குறளைப் பற்றிப் பேசியதற்கு திரு. வல்லமைச்சன் என்பவர் 133 அதிகாரங்களுக்கு ஓர் அதிகாரத்திற்கு ஆயிரம் வீதம் 13330 கியாட் அளித்தார்.

இவ்வாறு பல இடங்களில் அளித்த ஓர் இலட்சம் கியாட்டுகளை அங்கு தமிழ் வளர்ச்சிக்கு அளித்துவிட்டார். இப்படிப் பலப்பல பெருமைகள்...

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை

யாங்கோன் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் கோவில்கள் தர்ம பரிபாலன சபை

எண். 112 / 122, சுவேபொளவ்ந்தா (முகல்) வீதி, யாங்கோன்,
போன் : 240970

தைப்பூச விழா அழைப்பிதழ்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

புன்னெறி யதனிற் சொல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியானக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி

நிகழும் சுபானு ஆண்டு தைத் திங்கள் 13-ம் நாள் (27-01-2004) செவ்வாய்க்கிழமை காலை 8 முதல் 8.30 மணியளவில் சஷ்டி திதி, ரேவதி நட்சத்திரத்தில் பசுமந்தான் அருள்மிகு நகரத் தண்டாயுதபாணி ஆலயத்தில் கொடியேற்றி பிரதிதினமும் மாலை 6.30 மணிக்கு உபயங்கள் நடைபெறுவதுடன்,

தைத் திங்கள் 21-ம் நாள் (04-02-2004) புதன் கிழமை காலை 7.00 மணியளவில் அருள்மிக முருகப் பெருமான் சுவேபோந்தா வீதி, ஆறரையிலிருந்து எழுந்தருளி சுவேபௌவ்ந்தா வீதி மஹாபண்டூலா வீதி, அப்பர் பசுமந்தான் வீதி வழியாக திருவுலாச் சென்று பசுமந்தான் மடத்திற்குப் போய்ச் சேருதல்.

தைத்திங்கள் 22-ம் நாள் (05-02-2004) வியாழக்கிமை தைப்பூசம் அன்று காலை 7.00 மணியளவில் அருள்மிகு முருகப் பெருமானுக்கும் பசுமந்தான் அருள்மிகு தண்டாயுதபாணிக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து கோவிலிருந்து வள்ளி தெய்வானையுடன் அருள்மிகு சுப்பிரமணியர் மடத்திற்கு எழுந்தருளி தீர்த்தப் பிரசாதம் கொடுத்து அன்று பகல் அனைவருக்கும் அன்னதானம் நடைபெறும்.

தைத் திங்கள் 23-ம் நாள் (06-02-2004) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் பசுமந்தான் மடத்திலிருந்து அருள்மிகு முருகப் பெருமான் எழுந்தருளி அப்பர் பசுமந்தான் வீதி, அனோரத்தா வீதி, சுவேபௌவ்ந்தா வீதி வழியாக ஆறறைக்கு வந்து சேர்க்கை சேருதல்.

அருள்மிகு முருகப் பெருமான் திருவுலாச் சென்று திரும்பும் இருநாட்களிலும் காவடி எடுக்கும் பக்தர்களும், சிவனடியார் திருக்கூட்டத்தினரும், யாங்கோன தேவாரக் குழுவினரும், காலாபஸ்தி ஸ்ரீ சுந்தர வினாயகர் ஆலய பஜனைக் கோஷ்டியினரும், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா முதலிய அருட்பாடல்களை ஓதி மகிழ்விப்பார்கள். சிவநேயச் செல்வர்கள் அனைவரும் தைப்பூச விழாவிலும் ஊர்வலங்களிலும் கலந்து கொண்டு அருள்மிகு முருகப் பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு

அரு. ரெத்தினம் செட்டியார்

(காரியதரிசி)

குறிப்பு : ஆண்டுதோறும் நகரத்தார் தர்மபரிபாலன சபையினர் இப்பூசத்திற்கு பதினைந்து இலட்சம் கியாட் (பர்மா ரூ) முதல் 20 இலட்சம் கியாட் வரை செலவு செய்கின்றனர். எனவே இதுவே நகரத்தார்கள் கலந்துகொள்ள உகந்த நேரம்.



இரங்கூனில் தைப்பூசத்தில் ஆறறை முருகன் பவனி வருதல்



பர்மா நகரத்தார் பெருமக்களுக்கு ஆறரையில் ஆறு. அழகப்பன் சிறப்புச் செய்தல்



தற்போது பர்மாவில் உள்ள நகரத்தார்கள்